# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

# 2013

## රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
## அரச கணக்குகள் திணைக்களம்
## Department of State Accounts


මහ භාණ්ඩාගාරය
කොළඹ 01

பொதுத் திறைசேரி
கொழும்பு 01

General Treasury
Colombo 01

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | மீளாய்வு | 2 |
| 3 | அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு | |
| 3.1 | அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் | 3 |
| 4 | பேரினக் கணக்குகள் மற்றும் அட்டுறு கணக்குப் பிரிவு | |
| 4.1 | நிதி கூற்றுக்களைத் தயாரித்தல் | 4 |
| 4.2 | கிரவுண் முகவர்களினூடாக பொருட்களை கொள்வனவு செய்யும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் | 5 |
| 4.3 | பொது வைப்புக் கணக்குகளின் மேற்பார்வை மற்றும் தொழிற்பாடு | 5 |
| 4.4 | செயற்படாத பிரதான கணக்குகளின் பேரேட்டு நிலுவைகளை கணக்கு முறைமையிலிருந்து அகற்றுதல் | 6 |
| 4.5 | பிரதான பேரேட்டைத் திறத்தல் மற்றும் அது தொடர்பான கணக்கீட்டு செயற்பாடுகளை செயற்படுத்துதல் | 6 |
| 4.6 | திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தல் | 7 |
| 4.7 | பொது சுற்றறிக்கைகளை வெளியிடல், பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் வழங்குதல் திணைக்களங்களுக்கு கணக்கீட்டு ஆலோசனைகளை வழங்குதல் | 7 |
| 5 | நிதித்தகவல் மற்றும் அறிக்கையிடற் பிரிவு | |
| 5.1 | மாதாந்த கணக்கு பொழிப்புக்களை சேகரித்தல் | 9 |
| 5.2 | ஆசிய வலய அரச கணக்கீட்டு அமைப்புகளின் சங்கம் | 11 |
| 6 | முறைமை, அபிவிருத்தி பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குப்பிரிவு | |
| 6.1 | அரசாங்கக் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்தல், மற்றும் அது தொடர்பாக கணக்கீட்டுப் பதிவியினருக்கு பயிற்சியளித்தல் | 11 |
| 6.2 | முற்பணக் கணக்குகளை நிர்வகித்தல் | 15 |
| 7 | நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கை | |
| 7.1 | பதவியணியினர் | 20 |
| 7.2 | நிறுவன வரைபடம் | 22 |
| 7.3 | பௌதீக வள அபிவிருத்தி | 23 |
| 7.4 | திறன் விருத்தி மற்றும் அறிவு விருத்தி | 24 |
| 8 | நிதித் தகவல்கள் | |
| 8.1 | நிதிச் செயலாற்றுகை | 29 |
| 9 | செயற்திட்டத்தை செயற்படுத்துவதன் முன்னேற்றம் | 30- 41 |

## 1. அறிமுகம்

இலங்கை பாராளுமன்றத்தின் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலமும் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலமும் அமைச்சுக்கள் திணைக்களங்கள் விசேட செலவுப் பிரிவுகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றின் பணிகளுக்காக ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம்,அரச வருமானங்கள், செலவினங்கள் முற்பணங்கள் மற்றும் வைப்பு கணக்குகளின் கணக்கு நிலைமைகள் சம்பந்தமாக ஒருமுனைப்படுத்திய கணக்குகளை பேணுதல் இந்த அரச கணக்குகள் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.
இந்தநோக்கத்திற்காக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள்,விசேட செலவுப் பிரிவுகள்,மாவட்ட செயலகங்கள் மாகாண சபைகள் அனைத்திலிருந்தும் மாதாந்தம் மின்னஞ்சல் மூலம் வருமான மற்றும் செலவினத் தரவுகள் சேகரிப்பதற்கும் பாராளுமன்றத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள வருமான, செலவின ஏற்பாடுகளின் வரையரையின் கீழ் மையப்படுத்தப்பட்ட கணக்குகளை பேணுவதற்கும் அறிக்கையிடுவதற்கும் இத்திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது அவ்வாறே உயர் முகாமைத்துவத்தினால் கணக்கீட்டிற்கு பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கு இலகுவாக்கும் வகையில் தகவல்களை வழங்குவதற்காக நிறுவன ரீதியான மற்றும் திறைசேரி மட்டத்தில் உள்ள வினைத்திறன் மிக்க கணனிமயப்படுத்திய முறைமை ஒன்றினை நோக்கி கணக்கீட்டு முறையினை இத்திணைக்களம் நிர்வகிக்கின்றது. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்படும் கணக்கீட்டுத் தரவுகள் மூலம் கணக்கீட்டு மற்றும் புள்ளிவிபரத்தரவுகளை தயாரிப்பதற்கு ஒருமுனைப்படுத்திய கணக்கீட்டுத் தரவு தகவற் களஞ்சியமொன்றை பேணும் பணியையும் இத் திணைக்களம் மேற்கொள்கிறது.

பகுப்பாய்வு நடவடிக்கை மற்றும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவிருக்கும் நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை இலங்கை பாராளுமன்றம்இ அந்தந்த அமைச்சுக்கள்இதிணைக்களங்கள்இ இலங்கை மத்திய வங்கி உட்பட ஏனைய நிறுவனங்களுக்கும் பயனுடையதாக இருக்கும் விதமாக அரசவருமானம் மற்றும் செலவினம் உள்ளங்கிய நிதிக்கூற்றுக்களை அரச கணக்குகள் திணைக்களம் வெளியிடுகின்றது

இதற்கு மேலதிகமாக நிதி ஒழுங்கு விதி 430 இல் விதித்துரைக்கப்பட்டவாறு

திறைசேரி புத்தகங்களில் உள்ளடங்கிய நிதித்தகவல்களை வெளிப்படுத்துதல் மற்றும் அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பித்தலும் இத்திணைக்களத்தின் பொறுப்பாகும்.2013 ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்டத்திறகேற்ப தணைக்களத்தின் ஒவ்வொரு கிளையினாலும்மெற்க்காள்ளப்பட்ட பங்களிப்புகள் பக்க இல 30-41 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. மீளாய்வு

இவ் வருடத்தில் அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினை இலகுபடுத்தும் நோக்கத்திற்காகவும் இணக்கப்பாடு மற்றும் அறிக்கையிடல் பணிகளை மேம்படுத்துவதற்காகவும் அரசு திரட்டிய வருடாந்த நிதிக் கூற்றுக்களின் சமர்பித்தலை மேலும் வினைத்திறன் உடையதாக்குவதற்காகவும் அரச நிதி தரவுகளை திரட்டல் அவற்றை ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு கொள்கைக்கு அமைய தயாரித்தல் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளை உரிய முறையில் சமர்பித்தல் மற்றும் அரச நிதி முகாமைத்துவத்திற்கு தேவையான தகவல்களை தொகுத்தல்போன்ற செயற்பாடுகள் இவ் வருடத்திலும் சிறந்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படிசெயற்பாடுகளின் போது அமைச்சுக்கள் திணைக்களங்கள் என்பவற்றின் கணக்கீட்டு பிரிவுகள் ஊடாக இயைபுடைய தரவுகளை தயார்படுத்துவதற்கு தேவையான இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்இகணக்குகளின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் இயைப்புடைய தகவல்களை வழங்குதல்,வரவு செலவுத்திட்ட பிரேரனைகளை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு தேவைப்படும் காலம் தவறா அறிக்கையை தயாரித்து சமர்பித்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலதிகமாக, நிதியாண்டின் முடிவில் சகல அமைச்சுக்கள் திணைக்களங்கள் என்பவற்றின் கணக்குகளை மூடுவதற்காக தேவைப்படும் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் தற்போது இருக்கும் விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் நியமனங்கள் என்வற்றின் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளை தயாரிப்பதற்கு தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டன அதற்கேற்ப குறித்தொதுக்கக்கப்பட்ட கால வரையறைக்குள் கணக்காய்வாளர் நாயகத்தினால் சான்றுதிப்படுத்தப்பட்ட குடியரசுக் கணக்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த

அறிக்கையில் திணைக்களமானது உள்ளடங்க கூடியதாக இருந்தது. மேலும் உரிய நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் முற்பனக் கணக்கு ஆகிய கணக்குகள் தயாரிக்கப்பட்டு குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க வருடாந்த வருமானம்,செலவினம் அரச கடன்கள் உட்பட 2012 ஆம் ஆண்டின் குடியரசுக் கணக்கை குறிப்பிட்ட கால எல்லைக்குள் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்தல் அதன் பிரகாரம், சகல நிலைத்தகவுள்ளவர்களின் தகவலுக்காக நிதித் திட்டமிடலமைச்சின் வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வு செய்யப்பட்டுள்ள கணக்கீட்டு தகவல்கள் பற்றிய வெளியீடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு

### 3.1 அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல்

அரச கணக்குகளில் குறிப்பிட்ட அரச நிதி அலுவல்கள் தொடர்பான தகவல்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நியமங்களுக்கமைய அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் புத்தகத்தில் உட்படுத்துவதற்காக சமர்ப்பித்தல் இப் பிரிவினது பிரதான பணியாகும்.அதற்கமைய வரவுசெலவுத்திட்ட செயற்பாடுகள் தொடர்பான பொருளாதார வகைப்படுத்தல் மற்றும் பொழிப்பு என்பவற்றிற்கு இணங்க அரச வருமானம் மற்றும் செலவினம் பற்றிய அடிப்படை எண்ணிக்கை குறிப்புகளும் தயாரிக்கப்பட்டு அரச நிதி கொள்கை திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கே 2013 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2012 ஆம் ஆண்டின் உண்மையான செலவினம் என்பவற்றின் அடிப்படையில் பிசுக்கால் கொள்கை திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட பொது மூலப்பிரமாணங்கள் மற்றும் தேவைபாடுகள் என்பவற்றின் பிரகாரம் 2013 ஆண்டில் வேறுபட்ட காலப்பகுதிகளுக்குரிய உண்மையான செலவினத்தை கணக்கிடுவதில் இத் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

காலத்திற்கு காலம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் செயற்பாட்டை மேற்பார்வை செய்த பின்னர் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உள்நாட்டு

இறைவரி திணைக்களத்துடன் இணைந்து அரச வருமானம் சேகரித்தல் தொடர்பாக அவதானத்துடன் கடமையாற்றுதல் அவற்றை அறிக்கையிடுதல் மற்றும் தெளிவாக்குதல் என்பன மேற்க்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டின் அரச வரவு செலவு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட அரச முதலீட்டின் முனனேற்றம் தொடர்பாக அவதானத்துடன் கடமையாற்றி முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளில் அவற்றின் நிதி முனனேற்றம் தொடர்பாக அறிக்கைகளை தயாரித்து தேவையான நடவடிக்கைகளுக்காக வேலைதிட்ட மேற்பார்வை திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுடன் தொடர்புடைய தரவுகளை தயாரிக்கும் முறைகள் (SDDS) தொடர்பான முறையில் அடிப்படைத்தகவல்களை தயாரித்து அரச நிதி கொள்கை திணைக்களத்தினது கவனத்திற்கு முன்வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய திட்டத்திற்குரிய உதவித் தொகைகள் மாகாண சபைகளினால் ஒய்வூதிய திணைக்களத்திற்கு முறையாக செலுத்த தவறும் போது ஏற்பட்ட சிக்கல் நிலைமையை சீர்செய்வதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாரியளவான பங்களிப்பை இப் பிரிவு வழங்கியுள்ளது.

## 4. பேரினக் கணக்குகள் மற்றும் அட்டுறு கணக்குப் பிரிவு

### 4.1 நிதி கூற்றுக்களைத் தயாரித்தல்

2013 ஆம் ஆண்டு முதல் திரண்ட அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு உரிய ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கையும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வைப்புக் கணக்கு மற்றும் முற்பணம் ”பீ” கணக்குகளை தயாரித்தல் சம்பந்தமான 3 அரச கணக்கு சுற்றறிக்கைகளும் இவ் வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக செலவினத் தலைப்பு 202 இன் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளின் உண்மைச் செலவு அடங்கிய 2012 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.விசேடமாக இலங்கை குடியரசின் 2012 ஆம் ஆண்டுக்குரிய நிதிச் செயலாற்றுகை கூற்று,

நிதி நிலைமை கூற்று, நிதிப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிகர சொத்துக்கள் மற்றும் பங்குகள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று ஆகியவை உரிய திகதியில் தயாரித்து கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அது சம்பந்தமான உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை வெளிப்படுத்தும் எனும் கணக்காய்வு அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்ளல் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் குடியரசு கணக்குகளை வெளியிடுவதும் இவ் வருடத்தில் உரிய தினத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 4.2 **கிரவுண் முகவர்களினூடாக பொருட்களை கொள்வனவு செய்யும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள்**

சுகாதார அமைச்சு மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு தேவைப்படும் மருந்துவ பொருட்களையும் அச்சுக் கடதாசிகளையும் கிரவுண் முகவர்களினூடாக வழங்குவதற்கு நேரடியாக இத்திணைக்களம் தலையிடுகின்றது. அதற்கேற்ப 2013 ஆம் ஆண்டிற்குள் சுகாதார அமைச்சுக்கு 22 தேவைப்பட்டியல் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள அதே வேளையில் அதன் பெறுமதி 92 மில்லியன் ரூபா ஆகும்.அத்துடன் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு 16 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 4.3 **பொது வைப்புக் கணக்குகளின் மேற்பார்வை மற்றும் தொழிற்பாடு**

தற்போது 15 வைப்புக் கணக்கு வகுதிகளின் கீழ் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ் வைப்புத் வகுதிகளிடையே 2013 ஆம் ஆண்டின் 06 வைப்பு வகுதிகளின் கீழ் 20 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த 20 கணக்குகளில் 6000/6 நிதி வகுதியின் கீழ் 01 கணக்கும் 6000/09 தற்காலிக கடன் பெறல் (நிருவாக கடன்) வகுதியின் கீழ் 02 கணக்குகளும் 6000/10 வகுதியாகிய வெளிநாட்டு நன்கொடை வகுதியின் கீழ் 09 கணக்குகளும் மற்றும் 2013 ஆம் ஆண்டில் புதிதாக தாபிக்கப்பட்ட புதிய 04 அமைச்சுகளுக்காக உடனடி தேவைக்கான நிதியம் 6000/12 வகுதியின் கீழ் 04 கணக்குகளும் 6000/13 தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வைப்புக்களின் கீழ் 01 கணக்கும் 6000/15 பல்வேறு வைப்புத் வகுதியின் கீழ் 03 கணக்குகளும் உள்ளடங்குகின்றன.இதற்கு மேலதிமாக 2013 ஆம் ஆண்டில் 8300

வகுதியின் கீழ் பிரதான பேரேட்டில் வெளிநாட்டு கடன்கள் பெறலுக்காக 36 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் 15 பெருந் தெருக்கள் மற்றும் பாலம் அபிவிருத்தி செயற்றிட்டங்கள், 01 மின்சார அபிவிருத்தி செயற்றிட்டம்,07 நீர் வழங்கல் மற்றும் துப்பரவு மேம்பாட்டு செயற்றிட்டங்கள், 03 கல்வியை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள், 07 சுகாதார சேவைக்கான செயற்திட்டங்கள், 01 நீர் பாசன அபிவிருத்தி செயற்றிட்டம், 02 கிராம மற்றும் நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முதலானவற்றிற்கு இந்த வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4.4 செயற்படாத பிரதான கணக்குகளின் பேரேட்டு நிலுவைகளை கணக்கு முறைமையிலிருந்து அகற்றுதல்

6000/3 மற்றும் 6003 பழைய வகுதியின் செயற்படாத நிலைமையிலிருக்கின்ற சுமார் 135 கணக்குகள் திறைசேரியின் கணனி முறைமையிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இரண்டு வருடத்திற்கு மேலாக செயற்படாத நிலைமையிலிருந்த 6000/1,6000/2,6000/6, மற்றும் 6000/8 ஆகிய வகுதிகளுக்குரிய 17 வைப்புக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தற்போது செயற்படாத நிலைமையிலுள்ள 6000/10 வெளிநாட்டு உதவி பிரதான வகுதியின் கீழ் 59 கணக்குகள் மூடப்பட்டு அக் கணக்குகளின் நிலுவையான 1,549 மில்லியன் ரூபாயும் 6000/11 வகுதிக்குரிய 57 கணக்குகள் மூடப்பட்டு 127 மில்லியன் ரூபாயும் அரசாங்கத்தின் வருமானத்திற்கு வரவுவைகப்பட்டுள்ளது.

### 4.5 பிரதான பேரேட்டைத் திறத்தல் மற்றும் அது தொடர்பான கணக்கீட்டு செயற்பாடுகளை செயற்படுத்துதல்

2013 ஆம் ஆண்டினுள் 54 அரச அமைச்சுக்கள், 92 திணைக்களங்கள், 22 விசேட செலவு அலகுகள் மற்றும் 9 மாகாண சபைகள், 25 மாவட்ட செயலகங்கள் என்பவற்றின் கணக்கு நடவடிக்கைகளை செயற்படுத்துதல் மற்றும் அதற்கான கணக்கீட்டு அறிவுரைகளை வழங்கிய அதே வேளையில் மேலதிக நிதி ஒதுக்கீடு வழங்குவதில் 822 அனுமதிப் பத்திரங்கள் சம்பந்தமாக நிதி ஒழுங்கு விதி 66 இன் கீழ் 1596 இடமாற்றப் பத்திரங்கள், நிதி ஒழுங்கு விதி 69 இன் கீழ் 68 நிதி பரிமாற்றங்கள் ஆகியவற்றிற்காக கணக்கீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 4.6 திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தல்

2013 ஆம் ஆண்டில் 51 அரச கணக்கு குழு கூட்டங்களை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும் சில கூட்டங்கள் பிற்போடப்பட்டதால் அவற்றில் 43 கூட்ட அமர்வுகள் மாத்திரமே நடைபெற்றதோடு அதில் பங்குபற்றிய திணைக்களப் பிரதிநிதிகள் கூட்டங்களில் எழுகின்ற அரச கணக்குகள் தொடர்பான சிக்கல்கள் குறித்த தொழில்சார் தலையீட்டை வழங்கியுள்ளனர்.

### 4.7 பொது சுற்றறிக்கைகளை வெளியிடல், பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு கணக்கீட்டு ஆலோசனைகளை வழங்குதல்

நிதி தகவல்களை அறிக்கையிடுவதற்காக பயன்படுத்தப்படும் நிதி அடிப்படையில் தற்போது அரசாங்க அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் தயாரிக்கப்படும் வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கிற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் இருந்து அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல் வேண்டும் என 2013.01.24 ஆம் திகதிய SA/AS/AA Circular என்னும் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டதோடு அட்டுறு அடிப்படையில் கணக்குகளை வைத்திருக்கையில் நிலையான மற்றும் நடைமுறை சொத்துக்களை பதிவதற்கு குறியீட்டு இலக்க முறையொன்று 2013.07.12 ஆம் திகதிய SA/AS/AA Circular என்னும் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது.மேலும் இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 04 இன் பிரகாரம் அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 230/2013 மூலம் கடன்பெறல் செலவை மூலதனமாக்குவதற்கு உரிய SA/AS/AA Circular இலக்கம் கொண்ட சுற்றறிக்கையை வெளியிடுவதன் மூலம் 2013 ஆம் ஆண்டில் இருந்து தகுதி பெறும் சொத்துக்களை கொள்ளல்,நிர்மாணித்தல் அல்லது தயாரிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் அடிப்படையிலான செலவை அச் சொத்துக்களின் ஒரு பகுதியாக மூலதனமாக்குவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் இரண்டாவது அரையாண்டுக்குரிய

ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை கண்காணித்து அவதானிப்புக்களை செய்தலல், கணக்கு அறிக்கைகளில் மூலதனச் செலவுகளை வகைப்படுத்துகையில் தோன்றும் சிக்கல்களை தீர்த்தல் மற்றும் நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சின் அறவிட முடியாத முற்பணங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தலும் மாளிகாவத்தை செயலகத் தொகுதி மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் என்பவற்றிற்கிடையே தோன்றிய கணக்கியல் சிக்கல்களை தீர்த்தல், கடந்த சில வருடங்களில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கணக்குகளில் பதியப்படாத செலவுகளை பதிதல், சலுகை அடிப்படையில் வழங்கப்படும் வரிச் சலுகைகளை வைப்பிலிடல் தொடர்பாக திறைசேரி தொழிற்பாடு மற்றும் பிசுக்கால் கொள்கை முதலான திணைக்களங்களுடன் கலந்துரையாடி தீர்த்தல், 2000 - 2008 இடைப்பட்ட காலப்பகுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அரசாங்க அதிபர்களிடமிருந்து நெல் கொள்வனவிற்காக பெற்றுக்கொண்ட கடனை மீள அறவிடாமை மற்றும் விமான நிலையம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான சேவைகள் (இலங்கை) என்பவற்றின் ஐந்தொகையை திரட்டுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமச்சரவை படிவம் தொடர்பில் தோன்றிய பிரச்சினைகள் பற்றி அவதானிப்புக்களை செய்தல், வரிச் சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ததன் விளைவாக ஏற்பட்ட அரச வருமான இழப்புப்பற்றி கணக்கிடுதல் தொடர்பாக இலங்கை சுங்கத்திணைக்களத்துடன் கலந்துரையாடி நிகழச்சித்திட்டமோன்றை தயாரித்தல், அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் மதியுரைக் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அசைசுக்கள்/திணைக்களங்கள் என்பவற்றை வகுக்கையில் அல்லது ஒருங்கிணைக்கையில் முன்னேய அமைச்சின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பிரிப்பதற்காக முறையான திட்டமொன்று காணப்படாமை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கியமான பிரச்சினைகள் குறித்து உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்ப்பதன் மூலம் அந்தந்த அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் வைப்புக்களை மேலும் அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.இதற்கு மேலதிகமாக, அமைதி பேணும் கடமைக்காக கிடைக்கும் வெளிநாட்டு நாணயத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள உப வைப்புக்கணக்கிலிருந்து உள்ளாகிய செலவினத்தை கணக்கிடுவதற்கு முப்படையினருக்கும் எழுத்து மூலமான நிகழ்ச்சித்திட்டமொன்று 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்குகளை தயாரிப்பதற்கு ஏற்ப பொதுவான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களுக்கு மேலதிகமாக கல்வி அமைச்சு,சுகாதார அமைச்சு,கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றில் செயல்அமர்வுகள் நடாத்தப்பட்டன.

## 5. நிதித்தகவல் மற்றும் அறிக்கையிடற் பிரிவு

### 5.1 மாதாந்த கணக்கு பொழிப்புக்களை சேகரித்தல்

2013 ஆம் ஆண்டில் திணைக்களங்கள் உட்பட 54 அமைச்சுக்கள்,25 பிரதேச செயலகங்கள், மற்றும் 123 ஏனைய நிறுவனங்கள் திணைக்களங்கள் உட்பட ஆகியவற்றின் மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் சேகரிக்கப்படன. .2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியங்கள் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினமாக குறை நிரப்பு மதிப்பீடுகள் என்பனவற்றின் ஒதுக்கப்பட்டிருந்த தொகை 2,567 பில்லியன் ரூபா ஆகும். தொழிற்பாடுகளின் சிக்கல் வாய்ந்த தன்மை,கொடுக்கல் வாங்கல் முறைகள்,மற்றும் நிறுவனங்களின் அளவு போன்ற விடயங்கள் அடிப்படையில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.அதற்கேற்ப மாதாந்த கணக்குச் பொழிப்புக்களை சமர்ப்பிக்க வேண்டிய குறித்த திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன இந்த வருடத்தின் ஆரம்பத்தில் மாதாந்த கணக்கு தரவுகளை செய்ய வேண்டிய திகதியைக் குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிகையின் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு பொழிப்புக்களை .சமர்ப்பிப்பதற்கு தாமதித்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட போதும் பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்கள் மூலம் வருடம் முடிவடையும் போது தொடர்புடைய நிறுவனத்தினால் உரியதிகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு பொழிப்புக்களை சமர்ப்பித்தலானது திருப்திகரமான மட்டத்தில் இருந்ததாக பொதுத் திறைசேரியின் கணனி இணையத்தளத்திற்குள் உள்ளடங்கப்பட்டுள்ள பினவரும் கணனி அச்சிட்ட திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதற்கேற்ப உரிய மாதத்தின் உண்மை கணக்கு தரவுகளை அடுத்துவரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்தது திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு பொழிப்புக்களை சமர்ப்பித்தலானது திருப்திகரமான மட்டத்தில் இருந்ததாக பொதுத்

திறைசேரியின் கணனி இணையத்தளத்திற்குள் உள்ளடங்கப்பட்டுள்ள பினவரும் கணனி அச்சிட்ட திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதற்கேற்ப உரிய மாதத்தின் உண்மை கணக்கு தரவுகளை அடுத்துவரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்த்து.

| மாதம் | திறைசேரி கணனி அச்சிடலை வெளிப்படுத்திய திகதி |
|---|---|
| சனவரி | 2013 பெப்ரவரி 22 |
| பெப்ரவரி | 2013 மார்ச் 21 |
| மார்ச் | 2013 ஏப்ரல் 18 |
| ஏப்ரல் | 2013 மே 21 |
| மே | 2013 ஜூன் 18 |
| ஜூன் | 2013 ஜூலை 17 |
| ஜூலை | 2013 ஆகஸ்ட் 17 |
| ஆகஸ்ட் | 2013 செப்டம்பர் 17 |
| செப்டம்பர் | 2013 ஒக்டோபர் 10 |
| ஒக்டோபர் | 2013 நவம்பர் 18 |
| நவம்பர் | 2013 டிசம்பர் 13 |
| டிசம்பர் | 2014 சனவரி 18 |

இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்பட்ட செலவு மற்றும் வருமானத் தகவல்களை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்காக அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கி,தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், வரவுசெலவு திணைக்களம் மற்றும் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

### 5.2 ஆசிய வலய அரச கணக்கீட்டு அமைப்புகளின் சங்கம்

ஆசிய வலய அரச கணக்கீட்டு அமைப்புகளின் சங்கத்தை (AGAOA) தாபிப்பதற்கு இலங்கையானது ஒரு முன்னோடியாக இருந்தது. அச்சங்கத்தின் ஆரம்ப உறுப்பு நாடுகளில் ஒன்றான இலங்கை 2013 ஆம் ஆண்டில் இந்தச் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கை மேற்கொண்ட அதே வேளையில், இந்தத் திணைக்களம் சங்கத்தின் வருடாந்த கணக்குகளை தயாரித்து உறுப்பு நாடுகளுக்கு சமர்ப்பித்துள்ளது.இந்தச் சங்கத்தின் 2013 வருடாந்த பொது மாநாடு

மற்றும் நிருவாக சபையின் கூட்டம் பூட்டானின் திம்பு நகரில் இடம்பெற்றதோடு,இவ் ஆண்டில் சங்கத்தின் நிதி நம்பிக்கை பொறுப்பை வகித்து வலயத்தினுள் அரச கணக்குகள் திணைக்களம் அதன் சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

## 6. முறைமை, அபிவிருத்தி பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குப்பிரிவு.

### 6.1 அரசாங்கக் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்தல், மற்றும் அது தொடர்பாக கணக்கீட்டுப் பதிவியினருக்கு பயிற்சியளித்தல்

❖ மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளிலுள்ள அமைச்சுக்களும் திணைக்களங்களும் பயன்படுத்துகின்ற கணக்கு பதிவுக் குரிய கணனி மென்பொருள் தொகுதியின் அபிவிருத்தி பராமரிப்பு பயிற்சியளித்தல் மற்றும் தேவையான அறிவுத்தல்களை வழங்குதல் இப் பிரிவின் பொறுப்பாகும்.அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

❖ WINDOWS அடிப்படை நிகழ்ச்சி திட்டமொன்றாக நவீனமயப்படுத்தப்பட்ட புதிய கணக்கீட்டு நிகழ்ச்சி திட்டத்தில் மேலும் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை 2013 ஆம் ஆணடினுள் மேற்கொண்டு 2014 சனவரி மாத்திலிருந்து பயன்படுத்தக்கூடியவாறு அனைத்து மத்திய அரசினதும் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றின் கீழ் வருகின்ற சகல நிறுவனங்களுக்கும் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ WINDOWS அடிப்படை நிகழ்ச்சி திட்மொன்றாக 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட GPS நிகழ்ச்சித் திட்டத்தின் நவீனமயப்படுத்தற் பணிகளை 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நிறுவனங்களின் எழுத்து மூல வேண்டுகோள்களின் பிரகாரம் பழைய நிகழ்ச்சித் திட்டத்துடன் 03 மாத கால சமாந்தர பாவனையிற்கு அமைய பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன.

❖ மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் கணக்கு பேணலுக்கு உரிய மென்பொருட்களில் தோன்றிய சிக்கல்களை,2013 இறுதி கணக்குகளை தயாரித்தல் குறித்து 21 ஒரு நாள் கருத்தரங்குகள் நாட்டில் நடாத்தப்பட்டதோடு, இதற்காக மாவட்ட செயலகங்கள் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச

செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கள் திணைக்களங்களுக்குரிய உப அலுவலகங்களின் கணக்குப் பிரிவுக்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய அதே வேளையில்,வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மொழியில் குறித்த பயிற்சிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு சிங்கள மற்றும் தமிழ் உத்தியோகத்தர்கள் இருசாராரும் பங்குபற்றிய கருத்தரங்குகளில் ஆங்கில மொழியில் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன.

| கருத்தரங்கு திகதி | பங்குபற்றிய நிறுவணங்கள் |
|---|---|
| ஒக்டெபர் 29 ஆம் திகதி | மாவட்டச் செயலகங்கள் - கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா |
| ஒக்டெபர் 31 ஆம் திகதி | விவசாயத் திணைக்களம் |
| நவம்பர் 01 ஆம் திகதி | மத்திய மாகாணசபை |
| நவம்பர் 07 ஆம் திகதி | மாவட்டச் செயலகம் - கம்பஹா |
| நவம்பர் 12 ஆம் திகதி | கிழக்கு மாகாணசபை, மாவட்டச் செயலகங்கள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை |
| நவம்பர் 14 ஆம் திகதி | மாவட்டச் செயலகம் - அம்பறை |
| நவம்பர் 18 ஆம் திகதி | வட மத்திய மாகாண சபை - மாவட்டச் செயலகங்கள் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை |
| நவம்பர் 20 ஆம் திகதி | வட மாகாணசபை |
| நவம்பர் 22 ஆம் திகதி | மாவட்டச்செயலகம் - யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் |
| நவம்பர் 25 ஆம் திகதி | தபால் திணைக்களம் |
| நவம்பர் 26 ஆம் திகதி | தென் மாகாண சபை - மாவட்டச் செயலகம் -காலி மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை |
| நவம்பர் 28 ஆம் திகதி | நீதி அமைச்சு |
| டிசம்பர் 02 ஆம் திகதி | பொலிஸ் திணைக்களம் |
| டிசம்பர் 03 ஆம் திகதி | சபரகமுவ மாகாண சபை - மாவட்டச்செயலகம் இரத்தினபுரி மற்றும் கேகாலை |

| | |
|---|---|
| டிசம்பர் 05 ஆம் திகதி | ஊவா மாகாண சபை, மாவட்டச் செயலகம் பதுளை மற்றும் மொனராகலை |
| டிசம்பர் 06 ஆம் திகதி | நிலஅளவைத் திணைக்களம் |
| டிசம்பர் 09 ஆம் திகதி | வட மேல் மாகாண சபை, மாவட்டச் செயலகம் - குருநாகல் மற்றும் புத்தளம் |
| டிசம்பர் 13 ஆம் திகதி | கல்வி அமைச்சு |
| டிசம்பர் 17 ஆம் திகதி | சுகாதார அமைச்சு |
| டிசம்பர் 18 ஆம் திகதி | நிதி அமைச்சு |
| டிசம்பர் 23 ஆம் திகதி | மேல் மாகாண சபை |

இந்த கருத்தரங்குகளின் மூலம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்,புதிய கணக்கீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்,அந் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள நன்மைகள் மற்றும் மாவட்ட, பிரதேச கணக்கீட்டு அலகுகளுக்குரிய சிக்கல்கள் முதலானவை கலந்துரையாடப்பட்டன.மேலும் 2014 ஆம் வருடத்திற்கான புதிய கணக்கீட்டு நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கிய இறுவட்டு சகல கணக்குப் பிரிவுகளுக்கும் 2013 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டினுள் விநியோகிக்கப்பட்டது.

❖ கணக்குகள் பேணுதல் மற்றும் சம்பளம் தயாரிப்பதற்காக கணனி மென் பொருளை பயன்படுத்துவர்களுக்குரிய பல பிரச்சினைகள் உள்ளடங்கக்கூடியவாறு அரச கணக்குகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக் கையேட்டைப் பயன்படுத்தி அரச நிதி கணக்காளர் நிறுவனத்தின் மூலமாக அரச உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

❖ இதற்கு மேலதிகமாக கொழும்பு மற்றும் அதனை அண்மித்த அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் கணக்கு பிரிவுக்குப் பொறுப்பான 142 கணக்களர்களை 2013.12.12 ஆம் திகதி மிளோதா நிறுவனத்திற்கு வரவழைத்து அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சேர்மான கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு இலகுவான முறையில் அது தொடர்பிலான அறிவுறுத்தல் மற்றும் புதிய கணக்கீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.இங்கு திறைசேரி செயலாளரினதும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகமும் பங்குபற்றியதால் பொதுவாக கணக்காளர்கள்

எதிர்நோக்குகின்ற கணக்குசார் சிக்கல்கள் கலந்துரையாடப்பட்டதோடு விசேடமாக அரச நிதி முகாமைத்துவத்திற்கு பொறுப்பான அரச உத்தியோகத்தர்களாக கணக்காய்வாளர்களுக்கு புதிய தொழிநுட்பத்திற்கு அமைவாக புதிய தொலை நோக்குடன் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியதாக செயற்படுதல் குறித்து திறைசேரி பிரதி செயலாளரினாலும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினாலும் தெளிவாக்கப்பட்டது.

❖ மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்தரங்குக்கு மேலதிகமாக 03 ஒரு நாள் பயிற்சி செயலமர்வுகள் அரச நிதி கணக்காளர் நிறுவனத்தில் ஏறத்தாழ 175 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் 2013.12.20,2013.12.27, மற்றும் 2014.01.10 ஆகிய தினங்களில் கொழும்பில் நடாத்தப்பட்டன.

மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபையிலுள்ள சகல அமைச்சுக்களும், திணைக்களங்களும் பயன்படுத்துகின்ற கணனி மென்பொருள் தொகுதியின் அபிவிருத்தி, பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் முதலானவை இப் பிரிவின் பொறுப்பாகும். அதற்காக பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ❖ கணக்குகள் தொகுதியை பேணுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- ❖ தற்போது இருக்கின்ற சட்ட திட்டங்களின் பிரகாரம் கணக்குகளை வகைப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக்குறியீடுகளை நிர்மாணித்து கணக்கு அறிக்கைகளை பேணுவதற்காகவும் பிரதான கணக்கு பிரிவிற் அவற்றை அனுப்புவதற்காகவும் உதவுதல்.
- ❖ குறைந்த நேரத்தில் பிரதான கணக்கு பிரிவினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கணக்குத் தகவல்களின் செல்லுபடியாகும் தன்மையினை பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிப் படிவத்தின் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு வசதிகளை வழங்குதல்.
- ❖ கணக்குகள் மற்றும் புள்ளிவிபரவியல் தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து கிடைக்கின்ற தரவுகளை பேணுகின்ற மத்திய கணக்கீட்டுத் தரவுகள் முறைமைக்கு தரவுகளை சேகரித்தல், ஆலோசனைகளை வழங்குதல், தரவுகளை செல்லுபடியாக்கல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி படிவத்திற்கு தரவுகளை மாற்றுதல் மற்றும்

வழங்குதல்.

- ❖ வருடாந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடு மற்றும் அதற்குரிய செலவுகள் மற்றும் எதிர்வரும் வருடத்திற்கான தேவைகளை வழங்குவதோடு, விருத்தி செய்யப்பட்ட கணக்கு முறையொன்றை பேணுவதற்கு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உதவியாக அமையக்கூடிய கற்கை நெறிகளை த்துதல்.

**6.2 முற்பணக் கணக்குகளை நிர்வகித்தல்**

6.2.1 **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு B**

01. அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு B இற்கு ஏற்ப அனைத்து அமைச்சுகளினாலும் திணைக்களங்களினாலும் நி.ஒ. 506 D இற்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நிர்வாக கணக்கு மற்றும் திறைசேரி மீதி உட்பட அனைத்து அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு B இற்காக கணக்கிணக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அவ்வறிக்கையின் பிரகாரம் 38 நிறுவனங்களில் மேற்குறித்த கணக்குகளுக்கிடையில் காணப்பட்ட வேறுபாடுகள் அறிக்கையிடப்பட்டதோடு அவ்வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டன. அந்நிறுவனங்களில் 16 நிறுவனங்களில் காணப்பட்ட வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டதோடு,ஏனைய நிறுவனங்கள் வேறுபாடுகளை சரி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக தற்போது பின்னூட்டல் செய்யப்படுகின்றது.

02 மேலும் அனைத்து அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் தனிப்பட்ட கடன் மீதி வகைப்படுத்தலுக்குஅமைய அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் மீதியில் இடமாற்றங்களை பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினால் 335 மில்லியன் ரூபாயும், மரணமடைந்த உத்தியோகத்தர்களினால் 66.7 மில்லியன்ரூபாயும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களினால் 374.4 மில்லியன் ரூபாயும் சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களினால் 213 மில்லியன் ரூபாயும் கடன; மீதிநிலுவையாக உள்ளது என்பதுஅவதானிக்கப்பட்டது. அந்நிலுவையான கடன் மீதியை வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம்118, தாபன

விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 04வது பிரிவு மற்றும் xxiv ஆம்அத்தியாயத்தின் 4.5 ஆவது பிரிவுக்கேற்ப அறவிடுமாறு அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக தற்போது சிறந்த பலன்கிட்டியுள்ளது.

### 6.2.2 **திறைசேரியின் நானாவித முற்பணக் கணக்கு**

மாவட்ட செயலகங்களுக்குநெல்லை வாங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள முற்பணங்கள் மற்றும் காணாமற்போனபணம், முத்திரைகள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள்ஆகியவற்றுக்காக வழங்கப்பட்டுள்ள முற்பணங்களை அறவிடுவதனானது இத்திறைசேரியின் நானாவித முற்பணக் கணக்கின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது.அதற்கேற்ப, அம்முற்பணங்களினூடாக 2013 ஆம் ஆண்டில் பின்வருமாறு மாவட்ட செயலகங்களினால் மீதிகள் சரி செய்யப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | மாவட்ட செயலகம் | சரிசெய்யப்பட்ட பணத்தொகை |
|---|---|---|
| 7000/0/0/25003/418 | பொலன்னறுவை | 20,982.50 |
| 7000/0/0/25003/419 | அநுராதபுரம் | 118,600.00 |
| 7000/0/0/25003/420 | அம்பாறை | 500,000.00 |
| 7000/0/0/25003/425 | அம்பாந்தோட்டை | 11,319,294.95 |
| 7000/0/0/25003/428 | கண்டி | 120,000.00 |
| 7000/0/0/25003/443 | மாத்தளை | 55,817.37 |
| 7000/0/0/25003/500 | அம்பாறை | 1,809,310.00 |
| 7000/0/0/25003/505 | திருகோணமலை | 90,000.00 |
| மொத்தம் | | 14,034,004.82 |

உணவு ஆணையாளர் திணைக்களத்தினாலும், கமநல அபிவிருத்திதிணைக்களத்தினாலும் தீர்க்கவேண்டிய பணம் தொடர்பாக உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காககுறித்த உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன்

இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. உணவு ஆணையாளர் திணைக்களத்தை குறித்த மாவட்ட செயலகங்களுடன் இணைந்து உரிய வருடங்களில் கையளித்த மற்றும் பெற்றுக்கொண்ட அரிசி/நெல் கையிருப்பு,செலுத்தப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்ற கணக்கிணக்க பணிகளை செய்ததோடு அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய இரண்டு மாவட்ட செயலகங்களைத் தவிர ஏனைய அனைத்து மாவட்ட செயலகங்கள் தொடர்பாக குறித்த கணக்கிணக்க பணிகள்பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் அரசாங்க விலைக் கொள்கை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்ததனால் அநுராதபுரம், குருணாகல், புத்தளம், மாத்தளை, இரத்தினபுரி, வவுனியா, மொன ராகலை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்ட செயலகங்களுக்கு செலுத்த முடியாத 32,281,437.25 ரூபாய் தொகையை நட்டம் என்று கருதி கணக்கில் இருந்து பதிவழிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ளதோடு, அவ்விண்ணப்பங்கள் தற்போது அரச நிதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மன்னார் மாவட்ட செயலகத்தினால் செலுத்தப்பட வேண்டிய 449,999.99 ரூபாய் தொகையை கணக்கில் இருந்து நீக்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட நி.ஒ. 109 விண்ணப்பத்திற்கு பிரதான கணக்கீட்டு அலுவலகரிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை, குருணாகல் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணக் கணக்கு அரசாங்க விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்பட்ட நட்டம் முறையே17,077,427.35 ரூபாய், 4,999,594.54 ரூபாய் மற்றும் 627,225.00 ரூபாய் ஆகும். இந்நட்டங்களை நி.ஒ. 109 இற்கு அமைய கணக்கில் இருந்து நீக்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களுக்காக திறைசேரி பிரதி செயலாளரிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதோடு அம்பாந்தோட்டை மாவட்ட செயலகங்களினால்11,319,294.95 ரூபாய் தொகை 2013 டிசெம்பர் மாதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

நானாவித முற்பணங்களை பெற்றுக்கொடுப்பதன் கீழ் 2002.05.15 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீட்டு திட்டத்தில் நடை பெற்ற பணமோசடி காரணத்தால் பெற்றுக்கொடுத்த முற்பணத் தொகை ரூ. 6,640,248.59 ஆக உள்ளதோடு அத்தொகை இவ்வருடத்தில் சரி செய்யப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 2013 ஆம் ஆண்டு திறசேரி நாணாவித முற்பணகணக்கிற்கு ருபா 20,674,253,41செலக்ஷவைக்கப்பட்டுள்ளது.

6.2.3 **ஏனையஅரசாங்கங்களுக்கு செலுத்துவதற்கான முற்பணக் கணக்கு**

வெளிநாட்டு அரசாங்கங்களில் (சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம்) வேலை செய்து அவ்வரசாங்கங்களில் ஓய்வூதியம் பெறும் இலங்கையில் வாழ்கின்ற ஓய்வுபெற்றவர்களுக்காகவும் விதவைகளுக்காகவும் மற்றும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக இக்கணக்கு பேணப்படும்.

2013 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தினால் பின்வருமாறு ஓய்வூதியம் செலுத்தப்பட்டுள்ளது.

| அரசாங்கம் | செலுத்தப்பட்ட ஓய்வூதிய தொகை (ரூ) |
|---|---|
| ஐக்கிய இராஜ்ஜியம் | 2,661,957.12 |
| மலேசியா | 406,342.95 |
| சிங்கப்பூர் | 95,783.64 |
| மொத்தம் | 3,164,083.71 |

2013 ஆம் ஆண்டில் சனவரி மாதத்திலிருந்து அனைத்து பிரித்தானிய ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு ரூ. 500/= வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்பட்டதோடு அங்கீகரித்த முற்பணக் கணக்கு எல்லைக்குள் இருந்து ஏனைய அரசாங்கங்களுக்காக 2013 ஆம் ஆண்டில் செலுத்தக்கூடியதாக இருந்தது.

# 7 நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கை

## 7.1 பதவியணியினர்

2013 ஆம் ஆண்டில் பின்வரும் பதவியணியினர்16ஆம் பக்கத்திலுள்ள நிறுவனவரைபடத்தின் பிரகாரம் ஒரே குழுவாக நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பங்களிப்பு செய்துள்ளனர்.

| | பதவி | உண்மையான பதவியணியினர் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 2 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 3 | பணிப்பாளர்கள் | 03 | 03 |
| 4 | பிரதி/ உதவி பணிப்பாளர் (இ.கண.சே) | 04 | 08 |
| 5 | பிரதி/ உதவி பணிப்பாளர் (இ.நிர்.சே) | - | 02 |
| 6 | புள்ளிவிபரவியளாளர் | - | 01 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| 8 | மொழிபெயர்ப்பாளர் | -- | 01 |
| 9 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் | 01 | 02 |
| 10 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 17 | 22 |
| 11 | அரசாங்க முகாமைத்துவ உத்தியோகத்தர் | 14 | 12 |
